# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

## மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

# சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)

# மூன்று காணொளி ஆவணப்படங்களை உருவாக்கல்

1. செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையொன்றினூடாக (PMU) நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் (MoSDW) ஒத்துழைப்புடன் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் (MoMDE) சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தை செயற்படுத்துகின்றது. வன பரிபாலன திணைக்களம் (FD) மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணக்களம் (DWC) ஆகியன செயற்றிட்ட செயற்பாடுகளை அமுல்நடாத்துகின்றன.

   PMU ஆனது ESCAMP இன் பங்காளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இவ்வாறான செயற்பாடுகளின் வெற்றி, நிலைபெறுதகுதன்மை மற்றும் காட்சித்தன்மை ஆகியவற்றிற்கு உதவி வழங்குவதற்காக அதன் பாரிய செயற்றிட்ட செயற்பாடுகளை ஊக்குவித்து காட்சிப்படுத்த விரும்புகின்றது. இந்த பணிஒதுக்கீட்டின் அனைத்துமடங்கிய நோக்கமானது கீழே குறிப்பிட்டுள்ள தலைப்புக்களை சிறப்பாக அடையாளம் காட்டுவதற்காக ESCAMP தொடர்பான நியமமாக்கப்பட்ட ஒளிபரப்பிற்காக உயர் தரத்திலான 12-13 நிமிடங்களுக்கான தனித்தனியான மூன்று காணொளி ஆவணப்படங்களை இயக்கல் மற்றும் உருவாக்கல் என்பதாகும். இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட சூழல்தொகுதி தொடர்பாக ESCAMP இனால் திட்டமிடப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் இடையீடுகள் மற்றும் அணுகுகைகள் ஆகியவற்றை மையப்படுத்துவதன் மூலம் இந்த ஆவணப்படங்கள் பின்வரும் தலைப்புக்களில் பிரதான நோக்கமுடைய குழுக்களுடன் செயல்வலுவுள்ள முறையில் தொடர்பை ஏற்படுத்தி விழிப்புணர்வை உருவாக்கல் வேண்டும். இந்த நோக்கத்தை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குவதற்காக மையக்கருத்து குறிப்புக்கள் மற்றும் www.escamp.lk என்ற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிக்குறிப்பு ஆகிய குறிப்பீடுகளுடன் கீழேயுள்ள தலைப்புக்களின் அடிப்படையிலான ஆவணப்படங்களை உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

   அ. சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட ஆகிய மையக்கருத்துகள் தொடர்பான சுருக்கமான அறிமுகம்.

   ஆ. முன்னோடியான காணிச்சீராக்கல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்.

   இ. வாழ்வாதார பாதுகாப்பிற்காக மனித-யானை ஒருங்கிணைந்து வாழல் முறைமை.

2. PMU ஆனது இந்த பணிஒதுக்கீட்டை கையேற்குமாறு தகுதியும் அனுபவமுள்ள நிறுவனங்கள்/ நிறுவகங்கள்/ தொழில்வல்லுனர்களை அழைக்கின்றது. ஆர்வமுள்ள நிறுவனங்கள்/ நிறுவகங்கள்/ தொழில்வல்லுனர்கள் www.escamp.lk என்ற இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள நியதிக்குறிப்பின் அடிப்படையில் தேவைப்படுத்தப்படும் சேவைகளை நிறைவேற்றுவதற்கான தகைமையையுடையவர்களெனவும் அத்துடன் ஒரு பக்க ஆர்வக் கடிதம்; சுருக்கமான தொழில்நுட்ப முன்மொழிவு (நோக்கங்களை மையப்படுத்தல், முறைமைகள் மற்றும் அணுகுமுறைகள்) ஆகக்கூடியது 3 பக்கங்கள்; அனைத்து செலவினங்களையும் அடக்கிய வரவு-செலவு திட்டம்; ஆவணப்படங்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தொழில்வல்லுனர்களின் இற்றைவரையாக்கப்பட்ட சுயதரவுகள் மற்றும் 2 இலிருந்து 3 வரையிலான அண்மையில் தயாரிக்கப்பட்ட தரமுள்ள ஆவணப்படங்கள் ஆகியவற்றையும் சேவை வழங்குனர் வழங்கல் வேண்டும்.

3. நியதிக்குறிப்பினால் வழங்கப்பட்டுள்ள உலக வங்கியின் வழிகாட்டிகள் மற்றும் நடைமுறைகளுக்கமைவாக மிகபொருத்தமுள்ள தரமுள்ள நிறுவனம்/நிறுவகம் அல்லது தொழில்வல்லுனர் தெரிவு செய்யப்படுவார். (ESCAMP இன் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்)

4. முன்மொழிவுகள் மற்றும் உரித்தான ஆவணங்கள் ஆகியன 2018 ஜுலை 2 ஆம் திகதிக்கு பிந்தாமல் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Proposals for Video Documentaries for ESCAMP" என்ற சொற்பதங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

   விபரங்களுக்காக www.escamp.lk என்ற இணையதளத்தை பார்வையிடவும். எவ்வித மேலதிக தகவலுக்காகவும் வேலைநாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் 011-2 888426 என்ற இலக்கத்தினூடாக தொடர்பாடல் விஷே டத்துனருடன் தொடர்பு கொள்ளவும்.

   சமர்ப்பிப்புக்கள் பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP),**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**இல.: 82, ''சம்பத்பாய'',**
**ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**